செய்தி வெளியீடு எண்:451 நாள் : 01.09.2014

## செய்தி வெளியீடு

## கைத்தறி நெசவாளர்களுக்கான தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் (RSBY) பயனாளிகள் சேர்த்தல் – துவக்க விழா

-----

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் வசதியாகவும், வெளிப்படையாகவும் அதிக அளவில் மருத்துவ காப்பீடு பெறும் வகையில் "ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா'' எனும் திட்டத்தின் அடிப்படையில் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை செயல்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்பினை சார்ந்த கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பினை சாராத கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொழில் சம்பந்தப்பட்ட உபதொழில் செய்யும் தொழிலாளர்களும் பயன் பெறுவர்.

**தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, நெசவாளர்களின் பங்காக செலுத்தப்பட வேண்டிய பதிவுக் கட்டணம் நெசவாளர்கள் சார்பாக மாநில அரசே செலுத்த ஆணையிடப்பட்டுள்ளது.**

தற்போது நடைமுறையில் உள்ள நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வரை மட்டுமே மருத்துவ உதவிகள் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் நெசவாளர் உட்பட 5 நபர்கள் வரை ஆண்டொன்றுக்கு ரூ.37,500/– வரையில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ உதவிகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் உள்நோயாளிகளுக்கான மருத்துவச் செலவினத்திற்கு ரூ.30,000/–ம் புறநோயாளிகளுக்கான மருத்துவச் செலவினத்திற்கு ரூ.7,500/–ம் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு கை விரல் ரேகை பதிவு மற்றும் புகைப்படத்துடன் கூடிய மின்னணு அடையாள அட்டை வழங்கப்படும். இதன் மூலம் இந்தியா முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ அட்டையை பயன்படுத்தி மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

2013–14–ம் ஆண்டில் நடைமுறையிலிருந்த நல்வாழ்வுக் காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெறும் 2,70,000 பயனாளிகளும், இந்த தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுவர்.

இம்மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி.எஸ்.கோகுல இந்திரா அவர்களால் இன்று (01.09.2014) ஐந்து பயனாளிகளுக்கு மின்னணு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. இன்று முதல் 30.09.2014 வரை அனைத்து மாவட்டங்களிலும், நெசவாளர்களை பயனாளிகளாக சேர்க்கும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. கைத்தறி நெசவாளர்கள் அவர்கள் குடும்பத்தினருடன் இம்முகாம்களில் கலந்துக்கொண்டு இத்திட்டத்தில் பயனாளிகளாக பதிவு செய்து கொள்ளலாம். சேர்க்கப்பட்டுள்ள பயனாளிகள் அனைவரும் 01.10.2014 முதல் தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவர்.

இவ்விழாவில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலர் திரு.ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., அவர்களும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.க.பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும், திட்டத்தை செயல்படுத்தும் முதன்மை நிறுவனமான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.க.கர்ணன், கூடுதல் இயக்குநர் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவன மண்டல மேலாளர் திரு.ம.லோகநாதன் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**